ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

தற்காலத்தில் எந்தப் பிராமணன் ஸ்வதர்மத்தைச்சரிவர அனுஷ்டித்துவருகிறான்? ஸ்வதர்மத்தை யனுஷ்டிப்பதற்குரிய ஸாதனங்களும், தேசகாலாதிகளும் கிராமங்களில் வஸிப்பவர்களுக்கு ஒற்றுமைப்பட்டிருப்பினும் அவர்களே ஸ்வதர்மங்களை யனுஷ்டிக்கவில்லையென்றால் வயிறு வளர்ப்பதற்காகவென்றே பற்பல தொழிலைச்செய்துகொண்டு ஸாதனங்களும் கிடைக்காமலும் தேசகாலங்களும் ஒத்துவராமலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் நகரவாஸிகளா ஸ்வதர்மத்தைச் செய்யப்போகிறார்கள். உதாரணமாக போலீஸ் உத்தியோகத்திலமர்ந்தவர்கள் மேலதிகாரிகள் கட்டளையிட்டதை மீறிக்காலையில் ஸ்வதர்மத்தை யனுஷ்டிக்கமுடியுமா? வருஷத்திலொருநாள் தாய் தந்தைகளின் சிராத்தத்தையே அதற்குரிய அபரான்ஹத்தில் செய்யமுடியவில்லை. ஆஸ்பத்திரிகளில் உத்தியோகம் பெற்றவர்களுமிப்படித்தான் கஷ்டப்படுவதாகக் காணப்படுகிறது. தர்மங்களை யனுஷ்டிக்கவேணுமென்ற ஆஸ்தையுடையவர்கள் கதியே இப்படியானால் தர்மத்தில் வெறுப்படைந்தவர்களின் அனுஷ்டானத்தைக் கேழ்க்கவும் வேண்டுமோ? ரயில் வேலையிலமர்ந்தவர்கள் அதன் காலநிர்ணய அட்டவணைப்படி தன்னுடைய ஆஹார விஹார சயனாதிகாலங்களை மாற்றிக்கொள்ளவேண்டியதாகிறபோது தர்மத்தையனுஷ்டிக்க அவகாசமேது? இவ்வாறாகவே மற்றுமுள்ள உத்யோகஸ்தர்களின் நிலைமையைக்கண்டுகொள்ளவேண்டியதாயிருக்கிறது. உத்தியோகமுள்ளவர்களாவது தங்களது வேலைக்குத்தக்கவாறு ஆகார சயனாதிகளின் தேசகாலாதிகளை ஒருவாறாக நிலைத்துக்கொண்டிருக்கிறார்கள். உத்தியோகமில்லாமல் கிராமவாஸத்தையும்விட்டு பட்டணங்களில் வந்திருப்பவர்களுக்கு ஆகாராதிகளின் தேசகாலநிலையேகிடையாது. எந்தவிடத்தில் எப்பொழுதுநேருமோ நிலைக்கமுடியாது. வைதிகவிருத்தியை யாசிரயித்திருப்பவர்களோவெனில் கீழ்க்குறித்தவர்களையண்டியே காலம்கழிக்க வேண்டியதாயிருப்பதுபற்றி இன்னஸமயத்தில் இன்னது நேரப்போகிறதென்று நிலைத்துக்கொள்ளவே முடியாமலிருக்கிறது. அப்படியிருக்கையில் ஏதோசில கிராம மூலைகளில் வஸித்துக்கொண்டிருக்கும் சில வைதிகர்கள் வர்ணாசிரம தர்மத்தை ஸ்தாபித்து விடுவதாக அபிமானப்படுகின்றார்களே? யாருக்காக இந்தப்பாடு படுகின்றார்களோதெரியவில்லை, என்றுசிலர் ஸந்தேஹப்படுகிறார்கள். அதை நிவர்த்திப்பதற்காக அவர்களுக்குச்சிறிதுசொல்ல வேண்டியிருக்கின்றது. ஆனாலிந்தஸந்தேஹமின்று ஏற்பட்டதில்லை. வெகுகாலத்திற்கு முன்னமே இவ்வாசங்கையைச் செய்துகொண்டு சமாதானமும் கிரந்தங்களில் எழுதிவைத்திருக்கிறார்கள். அந்தஸமாதானத்தைப் பார்க்காமல் ஸந்தேஹப்படுகிறார்கள். வர்ணாசிரமதர்மிகள் யாவருமே தர்மங்களை விட்டுப்போட்டார்களென்று சொல்லுவதற்கில்லை. ஆதரவுடனவைகளை அனுஷ்டிக்கும் மஹான்கள் எவ்வளவோபேரிருக்கிறார்கள். எங்கேயோ ஒருவரிருவர் செய்யும் விபரீதாசாரங்களைக்காண ஸஹிக்காமல் எல்லோர்களுமே யிப்படித்தானிருப்பார்களோவென்று சிலர் கவலைப்படுவதே தர்மத்திலாதரவைக் காட்டுகிறது.

சுபம்!

ப—ர்.

51

# ஆர்ய தர்மம்.

சுக்ல-ஷூ ஆடி-மீ ௧௦௨


## வரதக்ஷிணை.

ஸ்திரீபுருஷர்கள் தங்கள் தங்கள் தர்மத்தோடிருந்து ஸந்ததிகளை விருத்திசெய்துவரவேண்டியதென்று ப்ரம்மாதிகளின் ஆக்ஞைப்படி நாளதுவரை பிரஜைகள் விருத்திசெய்யப்பட்டுவருகின்றார்கள். அதில் ஒரு வியவஸ்தையில்லாமல் ஸ்திரீபுருஷர்கள் கலந்துகொள்ளக்கூடாது என்பதற்காகவே விவாஹவிதியை வேதம் கூறுகின்றது. இது நான்குவர்ணத்தாரும் அனுஸரிக்க வேண்டிய நியமமாயினும் பிராமணர்களுக்கு அதிக நியமமேற்படுத்தப்பட்டிருக்கின்றது. அவற்றுள் ஸ்திரீகளின் விவாஹவயதைப்பற்றி முக்கியகாலம், கௌணகாலம் முதலிய காலவிசேஷம் நியமிக்கப்படுகிறது. இந்த வியவஸ்தையைத்தான் தற்காலத்திய சிலர் பற்பல யுக்திவாதங்களால் நிராகரிக்கப்பார்க்கிறார்கள். அதில் ருதுகாலத்திற்கு முந்தியே கண்டிப்பாய் விவாஹம் செய்துதீர வேண்டுமென தீர்மானம் பலமாக ஆதரிக்கப்பட்டுவருவதின்பயனாக வரதக்ஷிணையென்றதோர் சூழ்ச்சி, பிள்ளைவீட்டுக்காரர்களால் சின்னாட்களாக செய்யப்பட்டுவருவதில் அது தற்காலத்தில் நாடெங்கும் பாவி பெண்வீட்டுக்காரர்களைப் பலவிதத்திலும் கொந்திரவுசெய்வதாக ஏற்பட்டுவிட்டது. நமது கிருஹ்யஸூத்திரங்களிலும், ஸ்மிருதிகளிலும் உபதேசிக்கப்பட்ட முறையைக் கையாண்டுவருவோமாகில் ஒரு உபத்திரவமும் நேர்ந்திருக்கமாட்டாது. வீணாடம்பரத்திற்கு ஆசைப்பட்டு பணத்திமிருள்ள சிலர் இது ஓர் தர்மகாரியமென்றதையே மறந்து, போஜனாதிகாரியங்களில் இரண்டுநேரமென்ற விசேஷமில்லாமலும் தின்பண்டமின்னதென்றதோர் திட்டமில்லாமலும், கண்டபடி யாரம்பித்ததிலிருந்து வந்தகெடுதிசொல்லவேமுடியாது. பெண்வீட்டில்விவாஹ தினத்தன்று பாணிக்கிரண மங்கலியதாரண முதலியகாரியமானதும் வதூவரர்களை ரதத்திலேற்றி ஊருக்கனுப்பிவிடவேண்டும்.

பிறகு அந்த மாப்பிள்ளைப்பையன் தனது சொந்த வீடுசென்று பிரவிச்யஹோமம் செய்து மூன்றுநாள் ஔபாஸனத்தை யனுஷ்டித்து நான்காவதுநாள் பின்னிரவில் சேஷஹோமம் செய்வதோடு விவாஹகாரியம் முடிகிறது. இப்படிச்செய்தால் யாருக்குமுபத்திரவமில்லை. அவைகளையெல்லாம் மாற்றிப் பெண்வீட்டிலேயே நாலுநாளும் படுத்துகிறபாடு கணக்கிலடங்காது. இம்மட்டோடில்லாமல் வரதக்ஷிணை முன்பணமாகக் கேழ்க்கிற நிர்ப்பந்தம் ஸஹிக்கமுடியாது. பணத்தைப்பேசி முடித்தபின் பாத்திரஜாப்தா பிரஸ்தாவம் வருகிறது. "இந்த நாளிலிப்படியார் செய்கிறாள்" என்பது பெரியதோர்ஸூத்திரம். அந்தஸூத்திரபடிபாத்திர ஜாப்தா வெள்ளி பித்தளை வகையறாவாகப் பேசியபின், பக்ஷணத்திற்காக என்ன செய்கிறார்கள் என்று பிரஸ்தாவமாகி முடிந்தவுடன் மாப்பிள்ளைக்கு ஆபரணம், டிரஸ்ஸு வகையறாப் பேச்சுகிளம்பி "இப்படி ஒவ்வொன்றாய் ஏற்றினால் என்னசெய்கிறது." என்று பெண்வீட்டுக்காரன் சுணங்கினால் கல்யாணப்பேச்சே நின்றுவிடும் போலாய்விடும். இவ்வளவுதூரம் பேசிவிட்டு மாப்பிள்ளைக்குச் சேரவேண்டிய இந்தஸ்வல்ப்பவிஷயத்தில் தகராறுசெய்யவேண்டாமென்று மத்தியஸ்தர் மூலமாகத்தீர்மான மானபின்பும் போக்குவரவு செலவுக்காகப்பணம் கொடுக்கவேண்டியதாகவே பெண்வீட்டுக்காரனுக்கு நேரும். உடனே கிரஹப்பிரவேசச்செலவுக்காகக் கொடுக்காமல் யார்செய்கிறார்என்று அதையும் கொடுக்கும்படி தீர்மானித்து விடுகிறார்கள். கல்யாணத்திற்காகவென்று பிள்ளைவீட்டுக்காரன் கிளம்பினவிடத்திலிருந்து நடுவழியிலும் ரயிலைவிட்டு இரங்கினவிடத்திலும், கட்டைவண்டி வருகிறபாதையிலும், வந்திரங்கும் ஜாகையிலும், காபி உப்புமா ஸப்ளைசெய்வது பெண்வீட்டுக்காரன் கடமையாம். இவையெல்லாம் வரதக்ஷிணையின் அங்கங்களாம். இதிலகப்பட்டு கஷ்டப்படாதவர்யாருமில்லை. ஆகையால் இந்தக்கஷ்ட நிவர்த்திக்கு வேண்டியதோர் உபாயம் கூடிய சீக்கிரத்தில் செய்யாவிடில் வெகுபேர் சீரழிந்து விடுவார்கள். அப்படியாகாமல் வேண்டிய ஏற்பாடுசெய்து எல்லோரும் க்ஷேமமாயிருப்பார்களாக.

சுபம்!

ப-ர்.

# ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷித சரிதம்.

(382-வது பக்கத்தொடர்ச்சி.)

## 46. பட்டோஜி தீக்ஷிதரின் வரலாறு.

ஸித்தாந்தகௌமுதி, ப்ரௌடமநோரமை, சப்தகௌஸ்துபம் முதலான வியாகரண கிரந்தங்களை இயற்றின பட்டோஜி தீக்ஷிதர் ஸேதுயாத்திரைக்காக வடதேசத்திலிருந்து புறப்பட்டுத் தென் தேசம் வந்துகொண்டிருந்தார். அவருடைய கிரந்தங்கள் தென் தேசத்தில் பிரசாரப்பட்டிருந்தது. சப்தகௌஸ்துபம் என்ற கிரந்தத்தைத் தீக்ஷிதாள் சிஷ்யர்களுக்குப் பாடப்ரவசனஞ்செய்து வந்தார். அதைக் கேள்வியுற்று பட்டோஜிதீக்ஷிதர் சமயத்தை எதிர்பார்த்துப் பழவர்க்கங்களை எடுத்துக்கொண்டு அவர்களின் முன்னிலையில் வைத்து வணங்கி, வியாகரணபாடஞ் சொல்லுவதைத் தானும் கேட்க அனுமதிபெற்று, அவர்களின் பக்கத்தில் அமர்ந்து பாடப்ரவசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

அப்போது தீக்ஷிதாள் கிரமப்ராப்தமான பாடத்தைப் பிரவசனஞ்செய்து இது கிரந்த கர்த்தாவின் அபிப்பிராயம். ஆனாலும் மஹாபாஷ்யத்தின் அபிப்பிராயத்திற்கிணங்கவில்லை என்று மஹாபாஷ்ய வாக்கியங்களை எடுத்துரைத்து விரோதத்தை விசதமாசக் காண்பித்தார். அதைச் செவியுற்ற பட்டோஜிதீக்ஷிதர் அந்த விரோதத்திற்குப் பரிஹாரஞ்செய்து தனது ஆசயத்தைப் பிரகாசப் படுத்தினார். இவ்வாறு இரண்டு மூன்றுதடவை விரோதப்ரகடனமும், அதன் பரிஹாரமும், அவ்விருவர்களிலும் விவரிக்கப்பட்டது. பிறகு முடிவில் அப்பய்யதீக்ஷிதாள் அவருடைய ஆழ்ந்த ஞானத்திற்கு வியந்து "நீர்தானா பட்டோஜிதீக்ஷிதர்" என்று கேட்கவே, என்னைத்தான் பெரியோர் அப்பெயரால் அழைக்கின்றனர் என்று வணக்கமாய் உரைத்து எழுந்து நின்றார்.

அதனால் அவருடைய குணாதிசயங்களை அறிந்த தீக்ஷிதாள் ஸந்தோஷத்தோடு ஸம்பாஷித்துத் தனது கிரந்தங்களும் வடதேயத்தில் கொண்டாடப்பட்டுப் பிரகாசப்படுகின்றன என்று

அவருடைய வார்த்தையால் தெரிந்துகொண்டு, மத்வவித்வம்ஸனம் என்ற தனது கிரந்தத்தை அவருக்குக் கற்பித்தார்.

பின்பு பட்டோஜிதீக்ஷிதர் ஸேதுயாத்திரை முடித்துக்கொண்டு தீக்ஷிதாளிடம் வணங்கிநின்றார். அப்போது ஸேதுயாத்திரையால் நிர்மலமான அந்தக்கரணமுள்ள அவருக்கு தீக்ஷிதாள் பரிமளாந்தமான வேதாந்த கிரந்தங்களை சாந்திபாடம் செய்வித்தார்.

தவிரவும், ஐந்து அதிகரணங்களால் அந்தந்த மத்வஸித்தாந்தங்களைக் கண்டித்து வழிகாண்பித்திருக்கிறேன். (चतुर्लक्षणी) சதுர்லக்ஷணீயிலுள்ள அவைகளைக் கண்டித்து, நீ கிரந்தமாக்க வேண்டும் என்று தீக்ஷிதாள் அவருக்குக் கட்டளையிட்டார். அவரும் அப்படியே இரண்டு (परिच्छेद) பரிச்சேதங்களோடுகூடின (तत्वकौस्तुभं) தத்துவகௌஸ்துபம் என்ற நூலை இயற்றினார். அதன் ஆரம்பத்தில்,

फणिभाषितभाष्याब्धेः शब्दकौस्तुभ उद्धृतः ।
शाङ्करादपि भाष्याब्धेः तत्वकौस्तुभमुद्धरे ॥

ஸ்ரீபாதஞ்ஜலமஹாபாஷ்யமாகிற ஸமுத்திரத்திலிருந்து சப்தகௌஸ்துபம் எடுக்கப்பட்டது. சங்கரபாஷ்யமாகிற ஸமுத்திரத்திலிருந்தும் இப்போது தத்வகௌஸ்துபத்தை எடுக்கிறேன் என்று கூறியிருக்கிறார். அதில் முதலாவது (परिच्छेद) பரிச்சேதத்தில் தப்தமுத்ராங்கனகண்டனமும், இரண்டாவதுபரிச்சேதத்தில் மத்வமத கண்டனமும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அந்நூலில் (तदुक्तमभियुक्तैः) அது பெரியோர்களால் கூறப்பட்டிருக்கிறது என்று சொல்லி, மத்வதந்திரமுகமர்த்தன (मध्वतन्त्रमुखमर्दन) ச்லோகங்கள் அங்கு கையாளப்பட்டிருக்கின்றன.

உத்தரதேசத்தாரின் அபிப்பிராயம்—தீக்ஷிதாள் கங்காஸ்னானத்திற்குக் காசியாத்திரை செய்தபோது பட்டோஜியோடு ஸம்வாதம் ஏற்பட்டது— என்று கங்காவதரணத்திலுள்ள ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதாளின் ச்லோகத்தால் அதுபொருந்துமென்று தோன்றவில்லை.

गङ्गया यः पुरा स्नातः देवश्चन्द्रार्धशेखरः ।
गाङ्गेयेन पुनः सस्नौ सोऽवतीर्ययदात्मना ॥

முன்பு சந்திரசூடனை சிவபெருமான் கங்கையால் ஸ்னானம் செய்விக்கப்பட்டார். அவரே மறுபடியும் தீக்ஷிதாளின் ரூபமாக அவதரித்து (गाङ्गेयेन) ஸுவர்ணத்தால் அபிஷேகம் செய்யப்பெற்றார் என்பதினால், தீக்ஷிதாளுக்கு சின்னபொம்மராஜனால் ஸுவர்ணாபிஷேகம் செய்யப்பட்டது என்று கருத்தமைந்தது. அந்த வாக்கியத்தால் கங்காயாத்திரைக்கு அவர்கள் சென்றதாக ஊஹிக்க இடந்தாவில்லை என்று சிலர் கருதுகின்றனர்.

பட்டோஜிதீக்ஷிதரால் செய்யப்பட்ட குரு நமஸ்காரம்.

अप्पय्यदीक्षितेन्द्रानशेषविद्यागुरूनहं वन्दे ।
यत्कृति बोधाबोधौ विद्वदविद्वद्विभाजकोपाधी ॥

எந்த ஸ்ரீமத் அப்பய்யதீக்ஷிதாளின் கிரந்தத்தின் பொருளையறியுந் தன்மையும், அறியாத்தன்மையும், கற்றவன், கற்காதவன், இவர்களைப் பாகித்தறிவிக்கிற தர்மங்களாகுமோ, ஸகல கல்விகளுக்கும் போதகரான அந்த அப்பய்யதீக்ஷிதாள் என்ற ஆசார்யானை நான் பணிகிறேன் என்று, பட்டோஜி தமது நூலில் கூறுகின்றார்.

47. தீக்ஷிதாளைப்பற்றி மஹான்களின் அபிப்பிராயம்

பிரும்மாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள்,

श्रीशंकराचार्यनवावतारं विश्वेश्वरं विश्वगुरुं प्रणम्य ।
वेधान्तशास्त्रश्रवणालसानां बोधाय कुर्वे कमपि प्रयत्नम् ॥

என்று (सिद्धान्तविन्दु) ஸித்தாந்தபிந்து ச்லோகத்தால் அறிவிப்பதாவது.

“ஸ்ரீ சங்கராசாரியாளின் புதிய அவதார பூதாளும், விச்வகுருக்களுமான விச்வேசுவரரை நமஸ்கரித்து, வேதாந்தசாஸ்திர ச்ரவணத்தில் மந்தாளாயிருப்பவர்களின் அறிவுக்காக, ஒருமுயற்சியைச் செய்கிறேன்”

இதிலுள்ள ( वेदान्तशास्त्रं ) வேதாந்தசாஸ்திரம் என்பதற்கு

श्रीबादरायणीय चतुर्लक्षणीरूप सूत्रनिचय, भगवत्पादीय तद्भाष्य, तट्टीकावाचस्पत्य, तट्टीकाकल्पतरु, तट्टीकापरिमळ, रूपग्रन्थपञ्चकमर्थः ।

என்று வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது.

இதனுல் பரிமள க்ரந்தகாரரான அப்பய்யதீக்ஷிதாளின்ஞான திசயம் வெளியிடப்பட்டதாகிறது.

மேலும், ( अद्वैतसिद्धि ) அத்வைதஸித்தி முதலான கிரந்த கர்த்தாவான மதுசூதன ஸரஸ்வதீ ஸ்வாமிகள்,

सर्वतन्त्रस्वतन्त्रैः भामतीकार कल्पतरुकार परिमळकारैः ।

என்ற வாக்கியத்தால் தீக்ஷிதாள் ஸர்வதந்திரி ஸ்வதந்திராளென்று புகழ்ந்திருக்கிருர்கள்.

மேலும், மத்யார்ஜுனம், மாயவரம், கும்பகோணம், திரு வையாறு முதலான புண்ணிய ஸ்தலங்களில் புஷ்பமண்டபங்களை நிர்மாணித்தவரும், ரகுநாதபூபாலனின் மந்திரியுமான கோவிந்த தீக்ஷிதாள், சிஷ்யர்களுக்குக் கல்பதரு பாடஞ்சொல்லிக் கொண் டிருந்தபோது, அங்கு வந்த தீக்ஷிதாளைப் பார்த்து கல்பதருவி லுள்ள சில ஸம்சயங்களை விவரணம் பண்ணும்படி கேட்டுக் கொண்டார். அப்போது தீக்ஷிதாளின் வாக்யபாடவத்தின் திற மையை வியந்து அந்நூலுக்கு உரையிடும்படிக் கேட்டுக்கொண் டார். அப்போது,

अप्पदीक्षित किमित्यतिस्तुतिं वर्णयामि भवतो वदान्यताम् ।
सोऽपि कल्पतरुरर्थसिद्धये त्वद्गिरामवसरं प्रतिक्षते ॥

"அப்பய்யதீக்ஷிதரே? தங்களுடைய கொடையை எங்ஙனம் அதிக மாக உரைக்கவல்லவனுவேன்? வித்வான்களால் நிறம்பின ராஜ சபையில், அக்கல்பதருவும், தங்களது வாக்குக்களின் ஸந்தர்ப்பத் தை எதிர்பார்க்கிறது," என்று கோவிந்ததீக்ஷிதாளின் வேண்டு கோளுக்கிணங்கி பரிமளக்ரந்தம் அவர்களால் செய்யப்பட்டது

என்று சிவலீலார்ணவ பூமிகையில் T. S. குப்புஸ்வாமிசாஸ்திரிகள் கூறுகிறார்.

தீக்ஷிதவம்சாடரணத்திலோ அடியில் கண்டவாறு காணப் படுகிறது. நளசரித்திர நாடகத்தில் ஸந்தர்ப்பானுகுணமாக நீல கண்ட தீக்ஷிதாள்,

**वेदान्तकल्पतरुव्याख्यानं परिमलग्रन्थं रचयन्तः ते सरस कविना बालकविना ।**

என்று ஸரஸகவியான பாலகவியால் **अप्पदीक्षित** என்று ச்லோகம் சொல்லப்பட்டதாய்த் தெரிகிறது. அதிலும் **अर्थलिप्सया** என்று பாடபேதம் தெரிகிறது.

கல்பதருவின் வாக்யார்த்தம் பரிமளவியாக்கியானமின்றி மஹாவித்வான்களுக்கும் விளங்காது.

மற்றும் சிலரின் அபிப்பிராயம்,

**यदूद्वहेनाप्ययययज्वनाच भूमौकृता कल्पतरोःप्रतिष्ठा ।**
**एकेन तु द्वापरमाश्रितेन परेण तत्वप्रतिपादकेन ॥**

ஸத்தியபாமையை சந்தோஷப்படுத்துவதற்கு கண்ணபிரானும், வித்வான்களை சந்தோஷப்படுத்துவதற்கு அப்பய்யதீக்ஷிதாளாலும், அவனியில் கல்பதரு ஸ்தாபிக்கப்பட்டது.

ஆனாலும் ( **द्वापरमाश्रितेन** ) த்வாபரயுகத்தையடைந்த என்ற வாக்கியத்தால் **सन्देहद्वापरौचाथ** என்ற கோசப்படி ஸந்தேஹத்தை அடைந்த கிருஷ்ணனால் என்று பொருள் பெறுகிறது.

**तत्वप्रतिपादकेन** என்று மற்ற வாக்யத்தால் தத்வமான பொருளை = நிச்சயமானபொருளை அறிவிக்கிறவர்கள் தீக்ஷிதாள் என்று ச்லேடையால் அவர்களுக்கு விசேஷம் கூறப்பட்டிருக்கிறது.

பட்டோஜியின் பிரார்த்தனைக்காக வியாகரணசாஸ்திரத்தில் நமது தீக்ஷிதாளால் நக்ஷத்திரவாதாவனி என்று சப்தகௌஸ்துபத்தில் 27-இடத்தில் வாக்கியார்த்த விசாரம் செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதாளின் ஆசார்யாளான கீர்வாண யோகீந்திராளால் எழுதப்பட்ட, அப்பய்யதீக்ஷித சரிதம் ஒன்று இருப்பதாகப் பெரியோர் சொல்லுகின்றனர். அந்த சரித்திரம் கிடைத்

தால் தீக்ஷிதாளின் கிரந்தகாரணகாலம் முதலான விபரம் நன்கு அறிய ஸாத்தியமாகும். தீக்ஷிதாளுக்கு ஸமகாலத்திலுள்ளவர்களானதால் ஐயமின்றி எடுத்துரைத்திருப்பார்கள்.

கீர்வாணயோகீந்திராள் தனக்கு வித்யாகுருக்கள் என்று சிவலீலார்ணவத்தில் நீலகண்ட தீக்ஷிதாள் கூறுகின்றனர்.

अर्धंतनोरद्रिसुतामयोऽस्मीत्यहंयुना किं फलमादियूना ।
गीर्वाणयोगीन्द्रमुपास्महे तं सर्वात्मना शैलसुतात्मको यः ॥

"பாதிசரீரம் அம்பாளாயிருக்கிறேன் என்று அஹங்காரங்கொண்ட ஆதிபுருஷனாலே யாதுபயன்? யாவொருவர் பூர்ணமாகவே அம்பாள் ரூபியாயிருக்கிறாரோ, அந்த கீர்வாணயோகீந்திரனை உபாஸிக்கிறோம்" இதனால் அவர் அம்பாளின் உபாஸனையால் ஸித்திபெற்றவர் என்று தெரிகிறது.

மற்றும் தங்களுடைய கிரந்தங்களில் ஸமரபுங்கவதீக்ஷிதாள் நீலகண்ட தீக்ஷிதாள், மன்னார்குடி கீர்த்திசரீரத்தால் விளங்குகிற தியாகராஜாத்வரிகள், மற்றுமுள்ள அக்காலத்து வித்வான்கள் தீக்ஷிதாளின் மஹிமையை அங்கங்கு வெளிப்படுத்தியிருக்கின்றனர். அவைகளை இங்கே எடுத்துரைக்கத்தொடங்கினால் விரியுமாதலால் இச்சரிதத்தை முடித்துப் பிறகுத்தனியாய்எழுதலாமென்று இங்கு சுருக்கிக்கொள்ளுகிறேன்.

கே. வி. சுப்பிரமணியசாஸ்திரி.

---

## உபேக்ஷை.

பிராணிகள் பற்பல தர்மங்களால் பலவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் கர்மாவைச் செய்பவரென்றும், அதன் பயனையனுபவிப்பவரென்றும் பிரிக்கப்பட்டிருப்பதோர்வகையாம். கர்மாவைச்செய்பவரும், நல்ல கர்மாவைச்செய்பவர், கெட்ட கர்மாவைச்செய்பவர் என்று இருவகைப்பட்டவராவர். அதுபோலவே பயனையனுபவிப்பவரும் சுகத்தையனுபவிப்பவர், துக்

கத்தையனுபவிப்பவர் என்று இருவகைப்படுவார். ஆக புண்ணிய காரிகளென்றும், பாபகாரிகளென்றும் ஸுகிகளென்றும், துக்கிகளென்றும் நான்குவகைப்பட்டவர்களாயிருக்கின்றார்கள். வியவ்ஹாரதசையிலுள்ளவன் இவர்களோடு ஏதேனுமொரு காரணம் பற்றிப் பழகவேண்டியதாகிறது. அதில் சிலருக்கு ஸுகப்படுவோரைக்கண்டால் "இவன் ஸுகமாயிருக்கிறானே; இந்த சுகம் நமக்குக் கிடைக்கவில்லையே. நமக்குக்கிடைக்காவிடினுமிவனுக்கு அது இல்லாமற் போகவேண்டும்" என்று துவேஷமுண்டாகின்றது. அதனால் மனங்கலங்கி பலவிதமான கஷ்டங்களுக்காளாகிறான். அதனால் ஸுகிகளிடம் அவ்வாறாகப் பழகக்கூடாது. ஆனால் ஸ்நேகமாகப்பழகவேணும். அப்படியானால் அந்தக்கஷ்டங்கள் நேரிடா. எப்படியெனில் புத்திரன் ஸுகப்படுவானேயாகில் துவேஷமுண்டாகின்றதா? இல்லை. புத்திரன் ஸுகப்படுவதால் தானும் ஸுகத்தையனுபவிக்கிறான். அதாவது புத்திரனனுபவிக்கும் ஸுகத்தைத் தானனுபவிப்பதாக நினைக்கிறான். அதற்கு என்ன காரணமென்று ஆலோஜித்தால் ஸ்நேகத்தைத்தவிர ஒன்றும் சொல்லுவதற்கில்லை. இதுபோலவே ஸுகப்படுவோரிடமெல்லாம் ஸ்நேகத்தையே பாராட்டினால் அவர்களனுபவிக்கும் ஸுகமெல்லாம் தானனுபவிப்பதாகவே ஆய்விடும். அப்பொழுது துவேஷமுண்டாக வழியில்லை. அதனாலேற்படும் கஷ்டமும் உண்டாகாது. ஆகவே ஸுகப்படுவோரிடத்தில் ஸ்நேகத்துடன் பழகவேண்டுமென சாஸ்திரம் போதிக்கின்றது. துக்கப்படுவோரைக்கண்டால் 'இது இவனுக்குப்போதாது. இதைவிட அதிகமாக உண்டாகவேணு'மென்று தோன்றுகின்றது. அப்படித் தோன்றுவது மனதிற்கு ஒரு தோஷமாம். அது உண்டாகாமலிருக்க துக்கிகளிடம் கருணையைப்பாராட்டிப் பழகவேண்டும். அப்படியானால் அந்ததோஷமுண்டாகாது. அதெப்படியெனில் புத்திராதிகளுக்கு துக்கம் நேரிட்டபோது, அத்துக்கம் தனக்கே நேர்ந்ததுபோல் நினைத்து எப்படி இஃது விலகும்? அதற்கென்ன உபாயம்? என்று பாடுபட்டு அதை விலக்கமுயலுகிறானல்லவா? அதுபோலவே துக்கப்படுவோரிடமெல்லாம் கருணையைப் பாராட்டவேண்டுமென்று சாஸ்திரம் கூறுகின்றது. புண்ணிய கர்மங்களைச் செய்பவரிடம் ஸந்தோஷமாகப் பழகவேண்டும். அப்படியானால் அந்தப் புண்ணியகர்மம் தான் செய்ததாகவே ஆகும்.

பாபத்தைச் செய்பவரிடம், உபேக்ஷபாக இருக்கவேண்டும். அப்படியானல் அந்தப்பாபகர்மத்தில் பிரவிருத்தியுண்டாகாது. ஸாதாரணமாகப் பிராணிகளுக்குப் பழக்கத்தினுற்றான் குண தோஷங்கள் ஸம்பவிக்கின்றன. ஒருவன் செய்வதைப் பார்த்து மற்றொருவனும் அப்படியே செய்யத்துணிகிறன். இதற்கு உதாரணமிந்தக்காலத்தில் வெகுவாய்க்காணலாம். அதாவது க்ஷிமஹாராஜனது தூதர்கள்போன்ற சிலர் தர்மத்தையும் தார்மிகர்களையும் த்வேஷிக்கின்றனர். அதைப்பார்த்து மற்றவரொன்றிவ்வாருக தர்மத்தையும் தார்மிகர்களையும் தலையெடுக்கவிடாமற் செய்துவிட்டார்கள். யாகம்செய்வதாக ஒருவர் ஸங்கற்பித்துச் சிலருடைய ஸஹாயத்தால் அதை நிறைவேற்றவேண்டுமென்று நினைக்கவழியில்லை. உதவிபுரியாமலிருப்பதுமாத்திரமல்ல, உபத்திரவத்தையும் தங்களாலானவரைப் பலவாருகச் செய்யப்பார்க்கிருர்கள். இந்த விஷயம் பத்திரிகைகளைப் படிப்பவர்களுக்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்ததே. யாகாதி ஸகல தர்மங்களையனுஷ்டிப்பதற்குத்தகுந்த ஆசிரமம் கிரஹஸ்தாசிரமமாம். மற்ற ஆசிரமதர்மங்களும் ஸ்வாசிரமதர்மங்களும் இவ்வாசிரமத்தில் நேருகின்றதாம். இதர ஆசிரமிகளையாதரிக்கும் புண்ணியம் இவர்களுக்குக் கிடைப்பதுபற்றி இந்த கிரஹஸ்தாசிரமத்தை சுருதி கொண்டாடுகின்றது. அத்தகைய கிரஹஸ்தாசிரமத்திற்கு பரமமூலம் விவாஹஸம்ஸ்காரம். அதைப்பற்றி தற்காலமின்னுர்தான் பேசுவதென்று எல்லை கிடையாது. கண்டவர் கண்டபடி பேசத்தொடங்கியதற்கெல்லாம் காரணம் தர்மத்வேஷிகளது பழக்கமே. சிலர் ஸ்திரீகளுக்கு விவாஹம் அவசியமாகச் செய்யவேண்டுமென்பதில்லை, வேண்டுமானல் செய்துகொள்ளலாம், வேண்டாமென்ருல் விவாஹமில்லாமலே இருந்துவிடலாமென்று கூறுகின்றனர். விவாஹத்திற்குரிய வயக்கிரமத்தைப்பற்றிப்பேசாதவனும், அந்தப் பிரஸங்கத்தால் பிராமணர்களை தூஷிக்காதவனும் கிடையாது. அப்படி ஏதோ ஒரு காரணத்தால் விவாஹமாய்விட்டபோதிலும் ஸந்ததி விருத்தியாகாமலிருக்க கர்ப்போற்பத்தித் தடைசெய்ய வேண்டியதாகப் பல யோஜனைகள் செய்யப்படுகின்றன. இதைப் பெரிய தோஷமாக சாஸ்திரம் கூறுகின்றதென ஒரு வைதிகர்

சொல்லுவாரானால் அவரையும் சாஸ்திரத்தையும் திட்டாதவர் கிடையாது. இவ்விதமெல்லாம் நேருவதற்கு தர்மப்பற்றற்ற பாபிகளது பழக்கந்தான் காரணம். ஆகையால் அந்தப் பழக்கத்தை மெள்ளமெள்ள விலக்குவதற்கு வழி தேடவேண்டியது. அதைத் தான் நம்முடைய சாஸ்திரத்தில் உபேக்ஷையென்று வழங்குகிறார்கள். அவ்வாறாகப் பாபிகளிடத்தில் உபேக்ஷையாக இருந்து பழக வேண்டும். ஆகவே நான்குவிதப்பட்ட பிராணிகளிடத்தில் நான்கு விதமாகப்பழகி மனதில் தோஷம் நேரிடாமல் செய்யவேண்டியது சிரேயஸ்ஸை விரும்புவோரின் கடமையாம். இவைகளை மைத்ரீ முதலிய ஸாதனங்களென்று யோகஸூத்ரத்தில் கூறுகின்றார்கள். இவைகளையப்யஸித்து மனதின் குணத்தை ஸம்பாதித்துக் கொண்டு யாவரும் சிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

பா—ர்.

---

### பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்

## சோழமன்னர்களின் சரித்திரம்.

(400-வது பக்கத்தொடர்ச்சி.)

### அத்தியாயம் 6.

ஈசன்:— ஏ குபேரனே! இத்தூண்டகவனத்தில் குலோத்துங்கனுக்கு அரசுரிமையையும் ராஜ்ஜியத்தையும் பதினாறு பரம்பரை வரை நிலைபெற்றிருக்குமாறு அளித்திருக்கிறேன். என்னாலயங்களைப் புதுப்பிக்கவும், புதிதாய் நிர்மாணஞ்செய்யவும் உதவியாக நீ எப்பொழுதும் நிதிகளுடன் இங்கு வசிப்பாயாக. முன்னொரு காலத்தில் ஐப்யேசத்தில் (திருவையார்) நின்றும் கூப்பிடுதூரத்திலுள்ள சமீவனத்தில் என்னை அர்ச்சித்து நீ நிதிகளைப் பெற்றாய். முன்பு இராவணனால் புஷ்பகம் என்னும் விமானத்தைப் பிடுங்கிக்கொண்டு விரட்டப்பட்டபொழுது நீ அவ்விடத்தில் தவம் புரிந்துவந்தாய். அப்பொழுது தஞ்சேசனாகிய நான் ஆநந்தவல்லியுடன் உனக்கருள்புரிந்தேன். நீ என்னைப் பூஜித்ததனால் அவ்வூரிலுனக்கு ஆதிபத்யமளித்தேன்.

தனதான்யங்கள்நிறைந்த அவ்வூருக்கு தக்ஷிணளகம் எனப் பெயருமேற்பட்டது. அங்கு வசிப்பவர்களுக்குப் பாபமும், தரித்திரமும் ஒருக்காலுமுண்டாகாது அங்கு வசிப்பவர்களுக்குத் தனதான்யங்கள் நிறையும். தஞ்சேசுவரமென்னும் க்ஷேத்திரத்தில் சங்காப்பிரஸாதம் ஓர் க்ஷணத்திலேற்படும். ஆநந்தவல்லியின் அருளாலங்குள்ளோரனைவருக்கும் ஆனந்தம் பொங்கும். ஏ குபேரனே! அங்குள்ளோருக்குச் சிவஸாரூப்யம் நிச்சயமேற்படும்.

அங்கு இக்குலோத்துங்கனைச் சோழமன்னனாக அபிஷேகஞ் செய்விப்பாயாக. இவ்வுத்தம மன்னனுக்குப் பொருள்களையு மளிப்பாயாக. என் பக்தனும் ஸர்வலக்ஷணங்களும் பொருந்தியவனுமான இவனுக்கு க்ரீடம், ஆபரணம், வெண்கொற்றஞ்சாமரம் முதலியவைகளளித்து மகுடாபிஷேகம் சூட்டுவிப்பாயாக.

இவ்வாறுரைத்ததும் குபேரன் சிவனாணையைச் சிரமேற்கொண்டு, குலோத்துங்கனைக் கோமளாவுடன் சிம்மாசனத்திலிருத்தி அவன் நெற்றியில் நவரத்னமயமானகோர்பட்டத்தைச்சூட்டினான். கதிரவன் காந்தியையொத்த மகுடம், ஹாரங்கள், தோள்வளைகள் இனிய சரீரப்பூச்சுக்கள் முதலியவைகளை அவன் மனைவிக்குமளித்தான். அச்சமயம் ஸாக்ஷாத் பரமசிவன் ஸ்ரீபார்வதி தேவியுடன் விருஷபாரூடராய் எல்லாத்தேவர்களாலும் சூழப்பட்டவராகவிருந்துகொண்டு இக்குலோத்துங்கனுக்குக் காக்ஷி கொடுத்தருளினார்.

அம்மன்னன் தேவதேவனைக்கண்டு களித்து தன் மனைவியாகிய கோமளாவுடன் அவர் அடிமலர்களிற் பணிந்துநின்று அம்பிலி சூடியுமையாளுடன் தோன்றிய அவ்விறைவனை ஸ்தோத்திரஞ்செய்யத்தொடங்கினான்.

குலோத்துங்கன்:— ஹே தேவதேவரே! ஹாலகண்டரே! சம்புவே! உலகேயுருவாய்த் தோற்றுவீரே! உலகுக்குத்தலைவரே! வணங்கினோரிடுக்கண் நீக்குவோரே! வேதவேதங்களாலறியப் பெற்றோரே! பவரே! இச்சம்சாரவாழியழிப்பவரே! பிரமன், திருமால், ருத்திரனென்னும் மூவருக்குங் காரணப்பொருளே! எப்பொருளுமுடையீரே! எவ்வாகத்தமுமளிக்கவல்லீரே! உமது திருவடிகளைக் கண்ணுற்றதால் மிக்க பாக்கியம் பெற்றேன்.

இவ்வாறு அரசன் மொழிந்ததைக்கேட்டுக் குலோத்துங்கன் தலையில் தன் கையை வைத்துக்கொண்டு ஈசன் சொல்லலுற்றார்.

ஈசன்:— என் கணங்களிற் சிறந்த நீ என்னிடம் காட்டிய பக்தியால் இப்புவியின்கண் அரசனாகப் பிறந்தாய். என்னடிமலர்களிலுனக்குள்ள அன்பை என்றும் கைவிடாதே. ஜனங்களில் நான்குவர்ணங்களையும் நன்கு காப்பதால் எனக்கு உன்னிடம் அதிக அன்பு ஏற்படும். என்னுடைய ஸ்வாயம்புவஸ்தானங்களைச் சீர்திருத்தவே உன்னையரசனாக்கினேன்.

मया षोडशवंश्यानां तद्भावानां महीपते !
आदिमस्त्वं चोळकुले कुलोत्तुङ्गो भविष्यसि ॥

என்னருளால் உன்னிடமுதிக்கப்போகிறபதினாறுதலைமுறைகளுள் முதல்வனாகிய நீ சோழவம்சத்திற் சிறந்தவனாய்க் குலோத்துங்கனெனப் பெயருடன் வாழ்வாயாக. சிவகைங்கர்யம் என்றும் நடைபெறுமாறு குபேரன் உனக்கு நவநிதியுங்கொடுத்துதவுவான்

தேவலோகச் சிற்பிகளிற் சிறந்த விசுவகர்மாவுமுனக்குச் சிவாலயநிர்மாணகைங்கர்யங்களிலுதவிபுரிய இப்புவியில் மனிதனாய்ப் பிறப்பான்.

मनुर्यमो विश्वकर्मा धाता चैव विधातकः ।
सर्वशिल्पवतां श्रेष्ठाः भविष्यन्ति महीतले ॥

மனு, இயமன், விசுவகர்மா, தாதா, விதாதாவென்னுமிவர்களும் சிற்பிகளிற்சிறந்தவர்களாக இவ்வவனியிலுதிப்பார்கள்.

शिवकैङ्कर्यकरणात् वासः कैलास एवहि ।

சிவகைங்கர்யஞ்செய்யின் கைலாஸவாஸம் நிச்சயமேற்படும் ஆகலால் காவேரியினிருகரைகளிலுமுள்ள ஸ்வாயம்புவஸ்தலங்களை விதிப்படிப் புனருத்தாரணஞ் செய்வாயாக.

உடனே விசுவகர்மாவைக் கூப்பிட்டு ஈசன் கூறலானார்.

ஈசன்:— ஏ விசுவகர்மாவே! ஐந்து சிற்பிகளுடனும் பூமியில் மனிதனாய்ப்பிறந்து சிற்பசாஸ்திரங்களிற் சொல்லியிருக்குமாறு என்னுடைய ஆலயங்களை நிர்மாணஞ்செய்வாயாக. இவ்வரசவம்சத்தில் பதினாறுதலைமுறை அரசர்களரசாட்சி செய்யப்போகின்றனர். நீயும் வம்சக்கிரமமாக இவ்வுலகில் வசிப்பாயாக. இவ்வா

சர்களுக்குப் பொருளுதவி செய்யுமாறு குபேரனையுஞ் சிற்பத் தொழில்களைச் செய்யுமாறு உன்னையுமுத்திரவிட்டிருக்கிறேன். அரசன் செய்யவிருக்கும் சிவாலயநிர்மாணவிஷயத்தில் நீங்கள் இருவரும் இவனுக்கு உதவிபுரியுங்கள்.

ஏ அரசனே! குபேரன் உனக்கு வேண்டிய பொருளுதவுவான். நீ பூமியை வெட்டுவாயானல் அங்கு உனக்குத் தேவையான பொருள்கள் கிட்டும். அப்பொழுது விசுவகர்மா கூறுகிறான்.

விசுவகர்மா:— ஏ தேவனே! உம் கைங்கர்யத்தால் என் சில்பம் பரிசுத்தமடையட்டும். நானிவ்வரசனுக்கு வேண்டிய உதவி புரிகிறேன். உம்மாணையை யாரால் புறக்கணித்தல்கூடும்?

பிறகு குபேரனும் மஹாதேவனை வணங்கி மொழிகிறான்.

குபேரன்:— சோழமன்னர்களுள்ளவரையில் சிவகைங்கர்யத்திற்கு வேண்டிய பொருள்களை நவநிதிகளுடன் அவர்களுக்கு அளிப்பேன். உம்மாணையால் என் நிதிகள் ஸார்த்தகமாயிற்று. சிவாலயங்களைக் கட்டுவிக்கக்கருதிச் சோழமன்னர்கள் இப்பூமியை எங்கெங்கு வெட்டுகிறார்களோ ஆங்காங்கு நவநிதிகளையுமவர்களுக்குத் தோற்றுவித்து இப்புவிக்கு ஏற்பட்டுள்ள 'வஸுந்தரா' என்ற பெயரை மெய்ப்பிக்கிறேன்.

பிறகு விசுவகர்மா பரமசிவனை வணங்கி அவராணையைச் சிரமேற்கொண்டு சென்றான். அரசனும் மிகுந்தவானந்தமடைந்து ஈசனை வணங்கிநின்றான். பிறகு சிவனும் மறைந்தார். அரசனாகிய குலோத்துங்கனும் இவைகளைக் கனவுபோல் கண்டான்.

## அத்தியாயம். 7.

ஸூதர்:— பிறகு காலையில் குலோத்துங்கன் தன் தலையில் மகுடத்தைப்பார்த்து, தன்வீட்டுக் கொல்லைத்தோட்டத்தை வெட்டச்செய்தான். அங்கிருந்து தனக்கு மிக்கப்பொருள்கிடைத்தது. அதனால் யானை, குதிரை, சைனியங்கள், வேலைக்காரர்கள் முதலியவைகளை ஏற்படுத்திக்கொண்டான். பின்பு அத்தேசத்தையும் தன்வசமாக்கிக்கொண்டான். அவன் அவ்விராச்சியம் முழுதும் ஆண்டுகொண்டு சத்துருக்களை வென்று காவேரிக் கரையிலுள்ள காடுகளை யெல்லாம் வெட்டச்செய்தான். சிவபக்தி நிறைந்தவவ்வரசன் காவேரி என்னும் மஹாநதிக்கு நூறு

தலப்புகளையும், அதனிருகரைகளிலுமுள்ள ஆலயங்களையும், முக்கியமாக ஸ்ரீகண்டேசருடையதும் மத்துருபீரியில் மாத்ரு பூதேசருடையதும் ரத்தினகிரீசருடையவும், கோயில்களைக் கட்டுவித்தான்.

तथोन्नतञ्च विघ्नेशं स्थापयामास पर्वते ॥

அம்மாத்ருபர்வவதத்தின் உச்சியில் உச்சிப்பிள்ளையாரையும் ஸ்தாபனம் செய்தான்.

பின்பு ஸுகந்தகுந்தளாம்பாளுடையவும் திருணஜ்யோதீச்சுவரருடையவும் மரகதாசலத்தையும் சில்பிகளைக்கொண்டு ஜீர்ணோத்தாரணம் செய்வித்தான். அகிலாண்டேச்சுவரி ஜம்புநாதரிவர்களின் கர்ப்பக்கிருஹம், கோபுரங்கள், பிரகாரங்கள் முதலியவைகளைச்செய்தான். பஹாபிரகாரம் ஒன்றையும் மிக்க உயரமாகச் செய்தான்.

श्रीरङ्गसंज्ञिकस्यापि तथालयमथाकरोत् ।
जम्बूनाथक्षेत्रगुणं दृष्ट्वाशिष्यें हरिस्स्वयम् ।
प्रणिपत्य महादेव मखिलाण्डेश्वरीं तथा ॥

ஸ்ரீரங்கநாதரின் ஆலயத்தையும் நிர்மாணம் செய்தான். ஜம்புநாதரின் க்ஷேத்திரகுணத்தைக்கண்டு ஸ்ரீஜம்புநாதரையும் அகிலாண்டேச்சுவரியையும் நமஸ்கரித்து திருமாலங்குரக்கங் கொண்டிருக்கிறார்.

பிறகு தக்ஷிணகோகர்ணத்தையும், மலையின்கீழ் கற்களாலிரண்டு சிவாலயங்களையும் கட்டுவித்தான், அதன் பின்பு கிருதஸ்தானேச்சுவரருக்கு (திருநெய்த்தானம்) ஆலயத்தையும் பஞ்சநதீச்சுரரின் கர்ப்பஸ்தானம், கோபுரம், பிரகாரம் முதலியவைகளையும், ஸ்ரீரயாணேச்சுவரரின் (திருப்பழனம்) ஆலயத்தையும் நிர்மாணஞ்செய்தான்.

(இன்னும் வரும்.)

பண்டிட், N. வைத்தியநாதசாஸ்திரி,
ஸரஸ்வதிமஹால், தஞ்சை,